**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 82 /2023</u>**

பெயர் : அமுதசுரபி P.W.1.

க/பெ. : இன்பநாதன்

தேதி : 17.10.2024

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

வா.சா.ஆ.2 ஆன உயில் ஆவணத்தில் ஆனந்தவள்ளி என தட்டச்சு செய்யப்பட்டுள்ளது வல்லினத்திலும் கையொப்பமானது மெல்லினத்திலும் உள்ளது என்றால் சரிதான். தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் என்னை ஆனந்தவள்ளி தத்தெடுத்து வளர்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆன ஆதார் அடையாள அட்டையில் ஆனந்தவள்ளியின் பெயர் வல்லினத்தில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ல் ஆனந்தவள்ளியின் பெயர் வல்லினத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆனந்தவள்ளி என்ற பெயர் வல்லினத்தில் எழுதப்படுவதுதான் சரியானது என்றாலும் நான் தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. நான் இந்த வழக்கிற்காகத்தான் வழக்குரையில் ஆனந்தவள்ளி என தத்தெடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனந்தவள்ளி என தத்தெடுத்ததற்கான எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படததால் நான் ஆனந்தவள்ளியின் வாரிசு என உரிமைகோர இயலாது என்றால் சரியல்ல. உயிலில் கையொப்பம் ஆனந்தவள்ளி கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் நான் ஆனந்தவள்ளியின் வாரிசு சான்று கோர எந்த சட்ட முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.